**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுகள்**

--------------------

**1.1 அபிப்பிராயம்**

-----------------

சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

### 1.5. சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் | நிறுவனம் பொருட்டு பிரிதொரு உள்ளக கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்படவில்லை. | பதவியணி தேவை அடையாளம் காணப்பட்டு உள்ளக கணக்காய்வு உதவியாளர் பதவி உரு-வாக்குவதற்கான வேண்டுகோள் முகாமை- | உள்ளக கணகக்காய்வு பிரிவை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 40 (1) பிரிவு | | த்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவன விதிகளில் 4 (ஏ) பிரிவு | நிறுவனத்தின் கற்பித்தல், பயிற்றுவிப்பு அல்லது ஆராய்ச்சி பணிகளின் பொருட்டு நூலகம் மற்றும் ஆய்வுகூடம் பராமரித்தல் வேண்டுமாயினும், கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 09 ஆம் திகதியிலும் மாணவர்களுக்கு நூலகம் மற்றும் ஆய்வுகூட வசதிகளை வழங்கப்படவில்லை. | 2021 செப்தெம்பர் 15 ஆம் திகதி உதவி நூலகவியலாளரை நியமனம் செய்து கொண்டதன் பின்னர் நூலகம் தாபிக்கும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளப்படுகிறது. நிறுவனத்தில் ஆய்வுகூடங்களை தாபித்தல் பயனற்ற செலவினமாவதால் ஆய்வுகூடம் தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | நூலக உபயோகத்திற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை | நிறுவனம் தாபிக்கப்பட்ட 2019 ஆண்டு தொடக்கம் கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 20 ஆம் திகதியிலும் விரல் அடையாள இயந்திரம் மூலம் அலுவலர்களின் வருகை மற்றும் வெளியேறுதல் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 மார்ச் மாதத்தில் விலைமனு கோரியுள்ளதால் எதிர்காலத்தில் விரல் அடையாள இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.2 பிரிவு | நிதி விடய பொறுப்பு அமைச்சர் அவர்களின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளாது நிறுவனத்தால் ரூபா.3,370,000 ஐ நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | முன்அனுமதி கோரி 2021 திசெம்பர் 21 ஆம் திகதி அமைச்சிடம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு முன்அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அந்த பணத்தொகை 2021 திசெம்பர் 30 ஆம் திகதி நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.2,121,329 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 1,371,700 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.749,629 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு கற்கைநெறி கட்டணங்களின் வருமானம் அதிகரித்தல் பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 18 ஆம் திகதி 2048/46 ஆம் இலக்க வர்த்தமானிமூலம் தாபிக்கப்பட்ட சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முதலாவது மாணவர் குழுவிற்காக 19 மாணவர்கள் 2020 ஆகஸ்ட் மாதம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதும், கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 09 ஆம் திகதி வரை இரண்டாவது மாணவர் குழுவை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | MD in Ayurveda & Board Certification கற்கைநெறி பொருட்டு முதலாவது குழு 2020 ஆகஸ்ட் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்படினும், சுதேச மருத்துவ அமைச்சு அல்லது ஆயர்வேத திணைக்களத்தால் ஒவ்வொரு நிபுணத்துவத்தின் கீழ் பதவிகளை வெவ்வேறாக காண்பிக்கப்பட்டு நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படாமை, நிபுணத்துவ மருத்துவர்களில் ஒரு பகுதியினர் பயிற்சி நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்லுதல் ஆகிய விடயங்கள் காரணமாக 2022 மார்ச் 09 வரை இரண்டாவது குழு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முடியவில்லை. | சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு வாய்ப்புகளை அளிப்பதற்கு மாணவர்களை ஆட்சேர்பபுச் செய்தல் வேண்டும். |
| (ஆ) | ஆயர்வேத, சித்த, யுனானி என்பவற்றின் கீழ் 12 கல்விச் சபைகள் நியமனம் செய்திருந்தாலும், ஆயர்வேத கற்கை சபையின்கீழ் 05 கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், சித்த மற்றும் யுனானி கல்வி சபைகளின் கீழ் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | எல்லா நிபுணத்துவ துறைகளும் உள்ளடங்கும் வகையில் பிரதான கல்வி சபைகளின் பொருட்டு கற்கைநெறிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 நிதிகளின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாகனமொன்று கொள்வனவு செய்யும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் ரூபா.8,809,163 ஐ கல்வி அமைச்சு மற்றும் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற போதும், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இடைநிறுத்தப்பட்டதால் அந்த பணத் தொகை தொடர்பில் திறைசேரியிடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளாது மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நிதிய முகாமைத்துவ கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | புதிய மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாக காணப்பட்ட சுற்றறிக்கையின் தடைகள் காரணமாக அந்தப் பரிந்துரைகள் செயற்படவில்லை. 2021 ஏப்ரல் மாதத்தில் இதற்கான அனுமதி கோரி உயர் கல்வி அமைச்சு ஊடாக பொது திறைசேரியிடம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்போது உயர் கல்வி அமைச்சு அந்த 07 மில்லியன் ரூபாவிலான நிதியை வாகனம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக நிறுவனத்திற்கு தேவையான ஏனைய நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குப் பன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி ஆலோசனைக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.3 ஏனைய அமைப்புகளின் வளங்களை பயன்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் தற்போது ஆயர்வேத திணைக்களத்தின் கீழ் உள்ள பொரளை சுதேச ஆயர்வேத மருத்துவமனையில் ஐந்தாம் மாடியில் பராமரிக்கப்படினும், ஆயர்வேத திணைக்களத்துடன், உடன்படிக்கை மேற்கொள்ளாது மின்சாரம் மற்றும் நீர் அடங்கலாக வளாகம் பயன்படுத்தப்பட்டு 2019 ஆண்டு தொடக்கம் 2021 ஆண்டு வரையிலான காலப் பகுதி பொருட்டு மொத்தம் ரூபா .1,710,000 ஆன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், நிறுவனம், அலுவலகம் மற்றும் கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு அலுவலக வளாகத்தை முறையாக தாபிக்கப்படவில்லை. | கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உரிய தேசிய ஆயர்வேத மருத்துவமனை முன்பாக அமைந்துள்ள காணியில் சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவனத்திற்கும், சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கும் பொதுவான ஒரு கட்டிடம் நிருமாணிப்பதற்கு, 2021.04.23 ஆம் திகதி நடைபெற்ற 17 ஆவது முகாமைத்துவ கூட்டத்தில் காணி மற்றும் கட்டிடம் அடையாளம் காணுதல் இரண்டாவது மாற்று நடவடிக்கையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.<br><br>தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் 2.3 மூலதன செலவினத்தின் கீழ் புதிய கட்டிடம் நிருமாணித்தல் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு | சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி தாபனத்தின் வளாகம் முறையான வகையில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அரசாங்கத்தால் மேற்கொண்டுள்ள தீர்மானம் நீடிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறித்த சுற்றறிக்கையிலயே புதிய கட்டிடம் வாடகைக்கு பெற்றுக-கொள்வதற்கு விண்ணப்பம் செய்ய இயலாது எனவம் குறிப்பிடப்பட்-டுள்ளது. | |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நள்ளாளுகை

### 4.1 ஆண்டு அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆண்டுக்காக ஆண்டறிக்கை 2022 மார்ச் 09 ஆம் திகதியிலும் பாராளுமன்-றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டு அறிக்கைக்கு தேவை-யான அனுமதி கல்வி அமைச்சினால் பெற்றுக்கொண்-டதன் பின்னர் பாராளுமன்ற-த்திடம் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>அறிக்கை பாராளுமன்றத்திடம் முன்வைப்பதற்கு நிறுவனத்தால் மேற்கொள்ள வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் 2021 செப்தெம்பர் 23 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |